**வலப்பனை பிரதேச சபை**
**நுவரஎலிய மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூலை 27 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வலப்பனை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிர்மாண வேலை கடன்பட்டோர் பட்டோலையின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய மூலதன உதவி ரூபா 41,294,029 தொகை எனினும், அதனை ரூபா 41,841,733 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் கடன்பட்டோர் ரூபா 547,703 தொகையினால் மிகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் பதிவேட்டின் படி பிரதேச சபைகளை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய தொகை ரூபா 1,000,000 தொகை எனினும் அதனை ரூபா 1,700,000 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் கடன்கொடுத்தோர் ரூபா 700,000 தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீதி இருப்புக்களின் பெறுமதியாகிய ரூபா 1,359,187 தொகையினை நிலையான சொத்துக்களுடன் கூட்டி ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) முன்வரும் காலப்பகுதிக்கான ஏக்கர் வரி ரூபா 2,446 தொகையினை ஏக்கர் வரி கடன்பட்டோர்களில் இருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 12,873,979 இற்கான 05 கணக்கு விடயங்கள் தொடர்புடைய மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள ரூபா 12,983,565 தொகையான மீதிகளிடையே ரூபா 109,586 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கின் செலவு மீதி ரூபா 5,497 ஆகக் காணப்பட்டதுடன், அந்த மீதி ஏற்படுவதற்கான காரணத்தை பரிசோதனை செய்து அதனைத் தீர்ப்பதற்காக 2016 ஏப்ரல் 08 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்படக் கூடிய துணைச் சேவைக் கணக்கு மீதியின் பெறுமதி ரூபா 64,320,555 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 22,814,068 தொகை ஒரு வருட காலத்தை விஞ்சியவையாகக் காணப்பட்டது.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 58,598,222 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருட காலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 30,206,345 தொகையாகியிருந்தது.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

(i) தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 21,040,024 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

(ii) 2015 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கணிப்பீட்டு சபை அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்காமையால் சபையின் அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் பொருத்துக்கள் மற்றும் களஞ்சிய இருப்பு என்பவற்றின் உளமை மற்றும் பெறுமதி பற்றி சரியான தன்மையினை கணக்காய்வின் போது பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) பிரதேச சபை (நிதி நிருவாக) விதி இலக்கம் 218 | சபையின் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) அரச தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.6 ஆம் பந்தி | சபையில் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுள்ள/ சேவை இடைநிறுத்தப்பட்டுள்ள/ இறந்துள்ள 10 உத்தியோகத்தர்களிடம் ரூபா 140,299 கடன் மீதியை அறவீடு செய்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,781,425 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 6,168,770 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மிகையில் ரூபா 1,612,622 தொகை முன்னேற்றமொன்று காணப்பட்டது. அந்த முன்னேற்றத்திற்கு 05 வருமான விடயங்களில் அதிகரிப்பு மற்றும் 07 செலவு விடயங்களில் குறைதல் முக்கிய காரணமாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

செயலாளரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| வருமான விடயம் | 2015.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை | 2015.12.31 திகதியில் உள்ளவாறு நிலுவையில் அறவீடுகள் | 2015 ஆண்டின் போது சிட்டையிடல் | ஆண்டின் போது சிட்டையிட் டவைகளில் அறவீடுகள் | 2015.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்து | ஆண்டின் போது சிட்டையிட்ட வைகளில் | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி | 1,986,556 | 759,668 | 2,097,802 | 1,420,964 | 1,226,888 | 676,838 | 1,903,726 |
| கடை வாடகை | 3,593,210 | 307,270 | 2,572,965 | 1,999,515 | 3,285,940 | 573,450 | 3,859,890 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | --- | --- | 1,944,290 | 1,994,290 | - | - | - |
| ஏனையவை | 250,063 | 52,368 | 276,100 | 210,250 | 197,695 | 65,850 | 263,545 |

#### 2.2.2 வீத வரி

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,903,726 தொகையான அறவிடப்பட வேண்டிய வீத வரி காணப்பட்ட போதிலும், அப் பணத்தினை அறவீடு செய்வதற்காக 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 33 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.3 வாடகை

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 3,859,390 தொகையாகக் காணப்பட்டதுடன், அப் பணத்தை அறவீடு செய்வதற்காக குறிப்பிட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

#### 2.2.4 இறைச்சிக் கடை வாடகை

05 வருடங்களை விட மிகையான காலம் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 1,211,267 இற்கான இறைச்சிக் கடை வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.5 விளம்பர அறிவித்தல் பலகைக் கட்டணம்

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல் பலகை தொடர்பாக துணை விதிகள் ஆக்கப்பட்டு வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் ஒழுங்கு முறைப்படி கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 5,284,340 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,588,012 தொகை என்பன அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.2.7 மிகை விதிப்புக்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் கடந்த ஆண்டுகளின் போது விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்பின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 29,975 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை மதிப்பீடு

பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கியிருந்த ரூபா 1,000,000 தொகைக்கான செயற்திட்டங்களை பூர்த்தி செய்து அந்த விலைப்பட்டிகளை 2015 திசெம்பர் 28 திகதிக்கு மீளளிப்புச் செய்வதற்காக சமர்ப்பிக்கப்படாமையால் அந்த பணம் சபைக்கு கிடைப்பது நிச்சயமற்ற நிலைமையில் இருந்தது.

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

சபையின் நீர் வழங்கள் செயற்திட்டத்திற்காக ஆண்டின் போது ரூபா 2,169,371 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 287,550 மாத்திரமே வருமானமாக உழைத்திருந்தது.

### 3.3 செயற்திட்டத் தாமதங்கள்

சபையினை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 300,000 செலவில் 2015 திசெம்பர் 28 திகதிக்கு முன்னர் நீல்தன்டாஹின்ன உப அலுவலகத்திற்கு அண்மையில் வடிகால் முறைமை திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் அவை 2016 ஏப்ரல் 07 ஆம் திகதி வரை பூர்த்தி செய்திருக்கவில்லை.

### 3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக முறையான செயல்முறை ஒன்று கடைபிடித்திருக்கவில்லை. அத்துடன் சுற்றாடல் மாசடையக் கூடிய விதமாக லின்ஸ்டேல் தோட்டம் என்ற இடத்திற்கு குப்பைகள் குவிக்கப்பட்டு காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(i) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கபட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 06 வருமான விடயங்களில் 13 சதவீதம் முதல் 55 சதவீதம் வரையும் 08 செலவு விடயங்களில் 09 சதவீதம் முதல் 186 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 193 இன் பிரகாரம் பாதீட்டு நிதிஏற்பாடு குறை நிரப்புடன் ஒப்பிடு செய்து ஒவ்வொரு வரவு/ செலவு விடயங்களில் மிகைகள்/ பற்றாக்குறைகள் விடயங்களை தெளிவுபடுத்தும் கூற்றொன்று தயாரித்து சமர்ப்பித்திருக்கவில்லை.

### 4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற/ குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

சபைக்குச் சொந்தமான ரூபா 2,758,000 பெறுமதியான 08 சொத்து விடயங்கள் ஒரு வருடத்தை விட மிகையான காலம் விளைவற்றுக் காணப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு